**UNIVERSITY OF PERADENIYA**
**දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය**
தொடர் தொலைக் கல்வி நிலையம்
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

පළමු වසර ශාස්ත්‍රවේදී උපාධි පරීක්ෂණය (බාහිර - නව නිර්දේශය)
අගෝස්තු 2018
முதலாம் வருட கலைத்தேர்வு பரீட்சை ( வெளிவாரி - புதிய பாடத்திட்டம்)
ஒகஸ்ட் 2018
1st YEAR (100 LEVEL) EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL - NEW SYLLABUS) AUGUST 2018

## தற்காலத் தமிழ் இலக்கணம்: ஒலியனியல், உருபனியல், வாக்கியவியல்

## TLGE 101

இவ்வினாத்தாளில் எல்லாமாக எட்டு வினாக்கள் உள்ளன

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடைதருக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

நேரம்: **மூன்று மணித்தியாலம்**

---

1. ஒலியியல் (phonetics) என்றால் என்ன? தமிழில் வழங்கும் வெடிப்பொலிகளையும் மூக்கொலிகளையும் ஒலியியல் அடிப்படையில் வகைப்படுத்தி விளக்குக.

2. தற்காலத் தமிழில் சொல் முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துகளை உதாரணம் தந்து விளக்குக.

3. ஆக்கப்பெயர் என்றால் என்ன? தற்காலத் தமிழில் ஆக்கப் பெயர்கள் எவ்வாறு ஆக்கப்படுகின்றன என்பதை ஆராய்க.

4. கொடை வேற்றுமை என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்தி, தற்காலத் தமிழில் வழங்கும் கொடை வேற்றுமை உருபுகளையும், அவை உணர்த்தும் பொருள்களையும் உதாரணம் தந்து விளக்குக.

ம.ப.பா.

5. முற்றுவினை, எச்சவினை என்பவற்றுக்கிடையே உள்ள உருபனியல் வேறுபாடுகளைத் தெளிவுபடுத்தி, தற்காலத் தமிழில் தெரிநிலை வினைமுற்று எவ்வாறு காலம் உணர்த்துகின்றது என்பதை ஆராய்க.

6. செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றாவினை, பொதுவினை என்பவற்றை உதாரணம் தந்து விளக்குக.

7. சொற்றொடர் என்றால் என்ன? சொற்றொடர் வகைகளை உதாரணம் தந்து விளக்குக.

8. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கினை சுருக்கமாக விளக்குக.

(1) உருபனும் மாற்றுருபும்

(2) அகப்புணர்ச்சியும் புறப்புணர்ச்சியும்

(3) பெயரடை

(4) இடைச்சொற்கள்

(5) குற்றியலுகரம்

(6) காரணவினை